## அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரி - 2019

### 1.1 அபிப்பிராயம்

அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆம் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கட்டளைச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழக கல்லூரியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ கல்லூரிக்கு அவசியமாக உள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் திருத்தச் சட்டம் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதலை சமர்ப்பிப்பதற்கு தகுதியான உத்தியோகத்தர்கள் மார்ச் 31 இல் உள்ளவாறான நிலைமையை சுட்டிக்காட்டி அதே ஆண்டின் யூன் 30 இற்கு முன்னர் அவர்களது வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்களை வெளிப்படுத்துதலை சமர்ப்பிப்பதற்கு உரிய உத்தி யோகத்தர்களுக்கு அறிய தரப்பட்டுள்ளது. | 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை 1 ஆம் தொகுதியின் 11 ஆம் அத்தியாயத்தின் 10.3 ஆம் பந்தி | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களால் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் மருத்துவ அறிக்கை வழங்கப்படா திருந்ததுடன் மருத்துவ அறிக்கை கிடைக்கும் வரை அந்த உத்தியோகத்தர் களுக்கு சம்பளத்தை கொடுப்பனவு செய்யாமல் இருப்பதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மருத்துவ அறிக்கையை விரைவில் வழங்குமாறு இந்த இரண்டு உத்தியோ கத்தர்களுக்கும் தற்போது நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத் தலைவர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தி | கேள்விதாரரின் கூறுவிலை ஏற்றுக்கொண்டதன் பின்னர் வழங்குனருக்கு அழைப்புக் கடிதம் | 2019 யூலை மாதத்தின் கல்லூரியின் சில மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உடனடியாக அனுப்ப வேண்டிய போதிலும் பாதுகாப்பு சேவைகள் வழங்கல் பெறுகை, நிறுவனத்தினால் பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்ட 2 ½ தாமதங்களின் பின்னர் பாதுகாப்பு சேவைக்காக அழைப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | ஒழுக்காற்று செயற்பாடு பல காரணமாக குறித்த 21 மாணவர்களும் வகுப்பு தடைக்கு உட்பட்டிருந்தனர். இப் பரிசோதனைக்காக அச்சந்தர்ப்பத்தில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு தேவையாக இருந்ததால் முன்னிருந்த பாதுகாப்பு சேவை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இதனால் புதிய வழங்குனருக்கு அழைப்புக் கடிதத்தை அனுப்புவதற்கு தாமதம் ஏற்பட்டது. | எடுப்பதற்கு திணைக்களத் தலைவர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். |

(ஈ) சுற்றறிக்கை

--------------------

| | | | | |
|---|---|---|---|---|
| i | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓராண்டிற்கு ஒருமுறை அரசின் வாகனங்களில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப் பட வேண்டிய போதிலும் கல்லூரியின் 02 வாகனங்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் எரிபொருள் எரிவு பரிசோதனை இடம் பெற்றிருக்கவில்லை. | எரிபொருள் எரிவு பரிசோதனை எதிர்வரும் மாதங்களில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத் தலைவர் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| ii | 2019 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்காக வருகை மற்றும் வெளியேறலை கைவிரலடையால இயந்திரத்தின் மூலம் பதவு செய்வதற்கு மேலதிகமாக உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்காக வருகைப் பதிவேடொன்றை தமது வருகையை கையொப்பமிடுவதன் மூலம் உறுதிப்படுத்த | எதிர்காலத்தில் 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத் தலைவர் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினால் வருகைப் பதிவேடொன்றை தமது வருகைப் பதிவேடொன்றில் கையொப்பமிட்டிருக்க வில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 202,347 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,705,727 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,503,380 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டிற்கு ஒப்பாக வருமானம் ரூபா 1,825,842 ஆல் குறைவடைந்திருந்தத போதிலும் செலவினம் ரூபா 5,329,222 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் கல்லூரியின் ஊழியர் தொடர்பான கிரயம், 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதம் 1:0.39 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அப் பெறுமதி 1:0.74 என அதிகரித்திருந்தது. விரைவு விகிதமும் 1:0.234 முதல் 1.0467 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கல்லூரியின் 06 பாடநெறிகளுக்காக மாணவர் பதிவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது 3 சதவீதம் முதல் 42 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | கல்லூரியில் காணப்படும் இடவசதிகள் குறைவடைந்தமை, நிதிஏற்பாடு போதியளவில் கிடைக்காமை போன்ற விடயங்கள் இதற்கான காரணங்களாகும். | அனுமதி அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரியின் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளுக்காக அனுமதிக்கான தகைமை 60 சதவீதமாகவும் தொழில் | பாடநெறிகளுக்கு அனுமதிக்கும் போது தேசிய தொழில் தகைமை மட்டம் 4 விண்ணப்பதாரி களுக்காக முன்னரிமை வழங்கப்பட வேண்டிய போதிலும் அத் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்திருந்தமையால் | 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரி நியதிகளின் பிரகாரம் அனுமதி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகைமை மட்டம் 4 சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மற்றும் எஞ்சிய 40 சதவீதம் க.பொ.த (உ.தர) சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட போதும் மீளாய்வாண்டிற்காக பதிவு செய்யப்பட்ட 246 மாணவர்களில் தேசிய தொழில் தகைமை 4 சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் இரண்டு பேர் அதாவது 0.8 சதவீதமான மிகவும் சிறிய அளவொன்றாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. | உயர் தர தகைமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்டனர். | |
| (இ) | தேசிய தொழில் தகைமை NVQ Level 5 மற்றும் 6 வழங்கும் செயற்பாட்டை அடிப்படையாக கொண்டு பல்கலைக்கழக கல்லூரியின் 2015 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் பாடநெறிகள் பூர்த்தி செய்யப்பட்டு குறித்த தொழில் தகைமைகளைப் பெற்று வெளியேறிய மாணவர்களின் அளவு 35 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | தவணைகளில் சித்தியடையாத மாணவர்களுக்கு அதன் பின்னர் நடாத்தப்படும் பரிட்சையொன்று சித்தியடைந்த உரிய நிபுணத்துவத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் உரிய தொழில் தகைமையை பூர்த்தி செய்ய முடியுமாக இருக்கும். | தொழில் தகைமைகளைப் பெற்று வெளியேறிய மாணவர்களின் அளவினை அதிகரிப்பதற்கு திணைக்களத் தலைவர் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | கல்லூரியின் விரிவுரையாளர்களின் கல்விசார் செயலாற்றலை அளவிடும் அளவீடொன்றாக எடுப்பதற்காக விரிவரையாளர்கள் விரிவுரைகளை மேற்கொள்ளும் போது நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை பதிவொன்றி உரிய திணைக்களத் தலைவர் அல்லது கல்விப் பிரிவு தலைவரால் பரீட்சித்ததாக அவதானிக்கப்படவில்லை. | இதன் பின்னர் விரிவுரையாளர் களின் விரிவவுரைகளின் செயலாற்றலை திணைக்களத் தலைவர் அல்லது கல்விப் பிரிவு தலைவரால் பரீட்சிக்கப்படும். | அவதானிப்புடன் இணங்குகின்றுன. |
| (உ) | விரிவரையாளர்கள் பற்றாக்குறை மற்றும் காலம் மட்டுப்படுத்தப் பட்டமை போன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டு curriculam இல் தவணைகளை மேவுகை செய்ய வேண்டிய மணித்தியாலங்களின் அளவினை (Notional Hours) மாற்றப்படாமல் விரிவுரை மற்றும் செய்முறை கல்வி | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | தவணையொன்று மேவுகை மேவுகை செய்யப்பட வேண்டிய மணித்தியாலங்களின் அளவு திருத்தம் செய்யும் போது கல்விச் சபை மற்றும் அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.<br>பாடநெறிகளின் தரத்தை |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை மணித்தியாலங்களின் எண்ணிக்கை அண்ணளவாக தவணைக்கு 540 மணித்தியாலங்களாக கற்பிப்பதற்கு கல்லூரி தீர்மானித்திருந்த போதும் அதற்காக கல்விச் சபை மற்றும் அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 06 பாடநெறிகளின் 55 modules களுக்காக கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டிய காலம் மேவுகை செய்யப்படாமல் இருந்ததுடன் அவ்வாறு மேவுகை செய்யப்படாத காலம் 12 மணித்தியாலங்கள் முதல் 45 மணித்தியாலங்களான வீச்சில் இருந்தமையால் பாடநெறிகளின் தரம் தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது | | உறுதிப்படுத்தும் வகையில் கற்பிக்கப்பட வேண்டிய காலம் மேவுகை செய்யப்பட வேண்டும். |
| (ஊ) 2018 இரண்டாம் மற்றும் 2019 தவணைகளில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் ஒன்றுக்கொன்று மொடியுல்களின் பெறுபேறுகள் வழங்குவதில் பாரியளவிலான காலதாமதமொன்று காணப்பட்டதுடன் இதற்கு காரணமான விடைப் பத்திரங்களை மதிப்பீடு செய்து வழங்குவதில் தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. அத்தாமதத்தை குறைப்பதற்காக முறையான நடைமுறையொன்று கல்லூரியால் கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | விடைப் பத்திரங்களை மதிப்பீடு செய்வதில் தாமதத்தை குறைப்பதற்கு முறையான கட்டுப்பாட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆம் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் 2009(1) ஆம் வழிகாட்டலின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழக | பல்கலைக்கழகக் கல்லூரிகள் அனைத்தும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. அதன் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிக்கு நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வு | சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட அதன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட |

| | | |
|---|---|---|
| கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 04 ஆண்டுகள் கடந்திருந்த போதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | மதியுரையாளர் ஒருவரால் கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பிஈடி/55 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபித்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திடம் வேண்டப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டியதுடன் பல்கலைக்கழக கலலூரியினால் மீளாய்வாண்டின் போது அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் அது தொடர்பான செயற்பாடுகள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு போதியளவு நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதை இனங்காண முடியாதிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் நோக்கத்தை கணக்கிற்கு எடுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நேரடியாக பங்களிப்பதில்லை. எனினும் 2017.08.14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் என்.பி/எஸ்.சீ.பி.17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டும். |